(2) கவன ஈர்ப்பு.

(அ) சேலம் உருக்காலைத் திட்டத்தை கால அட்டவணைப்படி செயல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தைக் குறித்து

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, namely, the delay in the execution of the Salem Steel Plant according to the time table.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த அறிவிப்பு சேலம் உருக்காலைத் திட்டத்தை கால அட்டவணைப்படி செயல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்தைக் குறித்தாகும். மாண்புமிகு உறுப்பினர் ஒருவேளை 1973-ம் வருடம் ஜூலை திங்களில் முதல் தேதி பைனன்சியல் எக்ஸ்பிரசில் (Financial Express) மத்திய அரசு திட்டத்தில் செய்யப்போகும் தீவிர வெட்டினால் சேலம் உருக்காலைத் திட்டம் நிறுத்தப்படலாம் என்று வெளியிடப்பட்ட செய்தியை மனதில் கொண்டுள்ளார் போலும். இந்தச் செய்தியைப் பார்த்தவுடன் தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்குப் பத்திரிகை செய்தியை ஈர்ப்பு செய்து தந்தி கொடுத்துள்ளார். அதில் ஏற்கெனவே எடுத்த முடிவின்படி சேலம் உருக்காலைக்கான திட்ட ஒதுக்கீடுகளில் வெட்டேதும் இல்லாமல் திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார். மத்திய அரசிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. இந்த அரசிடம் உள்ள தகவலின் படி சேலம் உருக்காலை நிறுவனத்தினால் திட்டத்தைச் செயல்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றது என தெரிகின்றது.

THIRU N. DENNIS: Sir, may I know whether the acquisition proceedings have been completed?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லப்பட்டது போல் 10,000 ஏக்கராவுக்குமேல் நோட்டிஃபை செய்திருக்கிறோம். அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமோ, அதைத் தந்து உடனடியாக எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று சொன்னாலும் உடனடியாக எடுத்துக் கொடுக்கிறார்கள். இப்போது எவ்வளவு தேவையோ, அவ்வளவும் எடுத்துக் கொடுத்து விட்டோம்.

(ஆ) எண்ணூர் அனல் மின்நிலையத்தில் 31—7—1973 அன்று ஏற்பட்ட தீ விபத்தும் அதனால் ஏற்பட்ட சேதம் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, என். டென்னிஸ், ஏ. சுப்பிரமணியம், எம். சுரேந்திரன், டாக்டர் ஹாண்டே ஆகியோர் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத்